ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் புள்ளிவிபரத் திணைக்களம்
திகதி 30.04.2015

## 2015 ஏப்பிறலில் பணவீக்கம்

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்டவாறான கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் (2006/07 = 100) ஏற்பட்ட மாற்றங்களின் மூலம் அளவிடப்பட்டவாறான பணவீக்கம், 2015 ஏப்பிறலில், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், முன்னைய மாதத்தில் பதிவு செய்யப்பட்டவாறு 0.1 சதவீதத்தில் மாற்றமின்றியிருந்தது. ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் 2015 மாச்சின் 2.5 சதவீதத்திலிருந்து 2015 ஏப்பிறலில் 2.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.



கொ.நு.விலைச் சுட்டெண் 2015 மாச்சிலிருந்து 2015 ஏப்பிறலில் 0.2 சதவீதத்தினால் அதிகரித்தது. இம்மாத காலப்பகுதியில் உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பே இவ்வதிகரிப்பிற்கு முக்கியமாகப் பங்களித்தது. உணவல்லா வகையில், துணி வகை மற்றும் காலணி; வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள்; தளபாடம், வீட்டு உபயோகச் சாதனங்கள் மற்றும் வழமையான வீட்டு பயன்பாட்டுப் பேணல்கள்; சுகாதாரம் மற்றும் பல்வகைப் பொருட்கள் மற்றும் பணிகள் ஆகியவற்றின் துணை வகைகள் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரம்; போக்குவரத்து; கல்வி மற்றும் தொடர்பூட்டல் ஆகிய துணை வகைகளின் விலைகள் இம்மாத காலப்பகுதியில் மாற்றமின்றியிருந்தன.

எனினும், இம்மாத காலப்பகுதியில் உணவு விலைகளில் காணப்பட்ட மிதமான தன்மை 2015 ஏப்பிறலில் பணவீக்க அழுத்தங்களைத் தளர்த்தின. 2015 மாச்சில் நிலவிய விலைகளுடன் ஒப்பிடுகையில் அநேக காய்கறி வகைகள், அரிசி, சிலவகை உடன் மீன்கள் மற்றும் கருவாடு, பச்சை மிளகாய், சின்ன வெங்காயம், தேங்காய் என்பனவற்றின் விலைகள் 2015 ஏப்பிறலில் வீழ்ச்சியடைந்தன. இருப்பினும்கூட, கோழி இறைச்சி, தேங்காய் எண்ணெய் உருளைக்கிழங்கு, எலுமிச்சம்பழம், பெரிய வெங்காயம், சிலவகை பழவர்க்கங்கள் என்பனவற்றின் விலைகள் இம்மாத காலப்பகுதியில் சிறிதளவு அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன.

பொருளாதாரத்தின் முக்கிய பணவீக்கத்தினை பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2015 மாச்சின் 1.4 சதவீதத்திலிருந்து 2015 ஏப்பிறலில் 2.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம் 2015 மாச்சின் 3.0 சதவீதத்திலிருந்து 2015 ஏப்பிறலில் 2.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.